கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு -- 2012/2013
(யூலை/ஆகஸ்ட் 2015)

# ECOS 4202 Current Issues in World Economy

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

---

01.(a) வட அமெரிக்க மக்களின் வாழ்க்கைத் தரமானது எவ்வாறு தென்னாசிய மக்களின் வாழ்க்கைத் தரத்திலிருந்து வேறுபட்டுக் காணப்படுகிறது? உதாரணங்கள் மூலம் விளக்குக.

(12 புள்ளிகள்)

(b) வினா (a) ல் காணப்படுவதுபோன்ற வேறுபட்ட வாழ்க்கைத்தர நிலைமையை ஒரே நாட்டினுள் அவதானிக்க முடியுமா? நாடொன்றை உதாரணமாக எடுத்து விளக்குக.

(08 புள்ளிகள்)

02.(a) பொருளாதார அபிவிருத்தியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மரபு ரீதியான பொருளாதாரம் சார்ந்த அளவீடுகளைக் குறிப்பிட்டு அவை தொடர்பான பிரச்சினைகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

(b) அபிவிருத்தியை அளவிடுதல் தொடர்பாக முன்வைக்கப்பட்டிருக்கும் புதிய நோக்குகள் முன்னைய அளவீடுகளைவிட எவ்வாறு மேம்பட்டவையாக காணப்படுகின்றன.

(12 புள்ளிகள்)

03.(a) வறுமைப் பொறி என்பதனை எவ்வாறு விளக்குவீர்?

(04 புள்ளிகள்)

(b) “அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிடையே வருமான வளர்ச்சி வீதமானது பாரியளவில் வேறுபட்டுக் காணப்படுகின்றது.” உதாரணங்கள் தந்து விளக்குக.

(04 புள்ளிகள்)

(c) மனித மூலதனத்தின் விருத்தி மட்டமானது விருத்தியடைந்த நாடு ஒப்பிடும்போது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் எந்தள குறைந்த மட்டத்தில் காணப்படுகிறது? உதாரணம் தந்து விளக்குக.

(06 புள்

(d) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்குள்ளேயே மனித மூலதன விருத்தி மட்டம் வேறுபட்டுக் காணப்படுவதை உதாரணம் தந்து விளக்

(06 புள்

04.(a) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் குறைவிருத்தி நிலைமையை அ புவியியல் சார் நிலைமைகள் எந்தளவுக்குத் தீர்மானிக்கின்றன? நாடு உதாரணம் காட்டி விளக்குக.

(08 புள்

(b) குறைவிருத்தி நாடுகளில் காணப்படும் விருத்தியடையாத ச நிலைமைகளை எவ்வாறு இனங்காண்பீர்?

(08 புள்

(c)"பெரும்பாலான ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகளில் விவசாயத் துறைய தற்போதும் கணிசமான பங்கு வேலை வாய்ப்பினை வழங்கி வருகி புள்ளிவிபரம் தந்து விளக்குக.

(04 புள்ளி

05.(a) காலநிலை மாற்றத்தின் பொருளாதார பாதிப்புக்களை விளக்குக.

(08 புள்ளிக

(b) அத்தகைய பொருளாதார பாதிப்புக்களை எதிர்வுகூறுதல் எந்தளவு நிச்சயத்தன்மை வாய்ந்தது எனக்கூறுக.

(04 புள்ளிக

(c) காலநிலை மாற்றப் பிரச்சினை தொடர்பான கொள்கைத் தெரிவுக சிலவற்றை முன்வைக்க.

(08 புள்ளிக

*****